30.10.2025

CC No. 151/2024

ம.சா. 1 லூர்து ராஜ்

<u>குறுக்கு விசாரணை</u>

1) நான் தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. காரைக்குடி ஆவின் நிறுவனத்தில் செக்யூரிட்டியாக 2013 முதல் 2017 வரை வேலை செய்தேன். எதிரியை எப்படி தெரியும் என்றால் அவர் டிரைவராக இருந்தார். நான் வேலைக்கு செல்வதற்கு முன்பே எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு சொந்த ஊர் அரியக்குடி கிராமம், எதிரிக்கு சொந்த ஊர் மாத்தூர். இரண்டு ஊர்களுக்கும் இடைபட்ட தூரம் சுமார் 3 கி.மீ. தூரம். நான் ஆவின் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்த பின்னர் எதிரிக்கும் எனக்கும் நல்ல பழக்க வழக்கம் இருந்து வந்தது. எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால் நான் ஆவினில் வேலை செய்த போது மாதம் 15 ஆயிரமும் நான் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றதால் அதற்கான ஓய்வூதியம் ரூ. 15 ஆயிரம் ஆகும். நான் ஆவின் நிறுவனத்தில் பெற்ற சம்பளத்திற்கு நான் வருமான வரி கணக்கு செலுத்தினேனா என்றால் இல்லை. எனக்கு ஊரில் விவசாயம் செய்து வந்தேன். என் பெயரில் எந்த நிலமும் இல்லை. அதன் மூலம் ஆண்டிற்கு ரூ.50 ஆயிரம் வரும். மேற்படி வருமானத்திற்கு எந்த ஆதாரமும் இல்லை. குடும்பத்திற்கு மாதம் எவ்வளவு செலவு ஆகும் என்றால் தோராயமாக ரூ. 15 ஆயிரம் ஆகும். கடன் கொடுத்த சமயத்தில் வீட்டில் நானும் என் மனைவியும் மட்டும் இருந்தனர். எங்கள் இருவருக்கும் மாதம் ரூ. 15 ஆயிரம் செலவாகும். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். என் மகளுக்கும், மகனுக்கும் மேற்படி கடன் கொடுப்பதற்கு முன்பே திருமணம் நடைபெற்றுவிட்டது. என் மகனுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2023 ம் வருடம் என் மகனுக்கு திருமணம் நடைபெற்றது. தேதி, மாதம் நினைவில்லை.

2) எதிரிக்கு எந்த தேதியில் எந்த மாதத்தில் எந்த வருடத்தில் கடன் கொடுத்தேன் என்றால்

அக்டோபர் 2023 ம் ஆண்டில் பணம் கொடுத்தேன். என் மகனுக்கு திருமணம் முடிந்த பின்னர் கடன் கொடுத்தேன். என் மகனுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்ற விபரத்தை திருமண அழைப்பிதழை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். என் மகனுக்கு அக்டோபர் 2023 ல்தான் திருமணம் நடைபெற்றது. எதிரிக்கு எந்த இடத்தில் வைத்து கடன் கொடுத்தேன் என்றால் என் வீட்டில் வைத்து கொடுத்தேன். எப்போது கடன் கேட்டார் என்றால் என் மகனின் திருமணத்திற்கு முன்பு கேட்டார். நான் என் மகனின் திருமணம் முடிந்து தருகிறேன் என்று கூறினேன். எவ்வளவு கடன் கேட்டார் என்றால் ரூ. 50 ஆயிரம் கேட்டார். மேற்படி கடன் தொகையை எவ்வாறு கொடுத்தேன் என்றால் மொய் பணத்தில் இருந்து கொடுத்தேன். என் மகனின் திருமணத்திற்கு சுமார் 2 லட்சத்திற்கு மேல் பணம் வந்தது. அந்த பணத்தில் இருந்து கொடுத்தேன்.

3) திருமணத்திற்கு அடுத்த நாள் கடன் கொடுத்தேன். நான் எதிரிக்கு 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். நான் எதிரிக்கு பணம் கொடுத்தபோது உடன் யாரும் இல்லை. நான் பணம் கொடுத்தது வீட்டில் யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். திருமணத்திற்கு எவ்வளவு செலவு ஏற்பட்டது என்றால் என் மகனின் திருமணத்திற்கு ரூ. 9 லட்சத்து 25 ஆயிரம் செலவு செய்தேன். நான் திருமணத்திற்கு பின்னர் ரூ. 1 லட்சத்து 50 ஆயிரம் பாக்கி தொகைகளை பட்டுவாடா செய்தேன். திருமணத்தின்போது செலவு மற்றும் மொய் கணக்கு எழுதி வைத்துள்ளேனா என்றால் மொய் கணக்கு மட்டும் உள்ளது. திருமணத்திற்கு பின்னர் மொய் பணத்தை முழுவதையும் பட்டுவாடா செய்துவிட்டேன் என்றாலும் என்னிடம் பாக்கி தொகை எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. மொய் தொகை பாக்கி இருந்ததை நான் நிரூபிக்க கடமைபட்டவன் என்றால் சரிதான். இதற்கு முன்னர் நான் வேறு யாருக்கும் கடன் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்திருக்கிறேன். 2010 முதல் நான் கடன் கொடுத்துவருகிறேன். நான் 4, 5 நபர்களுக்கு கடன் கொடுத்து வாங்யிருக்கிறேன். கடன் கொடுத்த நபர்களுக்கு ஏதேனும் எழுதி வாங்கியிருக்கிறேனா

என்றால் இல்லை. வட்டி எதுவும் கணக்கு இல்லை. யாரிடமும் வட்டி கேட்கவில்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத்தற்கு அவரிடம் இருந்த எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை.

4) நான் பணம் கொடுத்தற்கு வீட்டில் கணக்கு எதுவும் எழுதி வைத்திருக்கவில்லை. எதிரிக்கு நான் வட்டிக்கு பணம் கொடுத்தேனா என்றால் வட்டிக்கு கொடுக்கவில்லை. வட்டி கொடுப்பதாக இருந்தால் கொடுங்கள் என்று கூறியிருந்தேன். நான் எதிரிக்கு கடன் கொடுத்ததை என் நினைவில் வைத்துதான் சொல்கிறேன். எதிரி மாத வட்டி செலுத்தினாரா என்றால் வட்டி கொடுக்கவில்லை. எவ்வளவு நாளில் திருப்பி செலுத்துவதாக கூறினார் என்றால் மாதம் ரூ. 5 ஆயிரம் வீதம் 10 மாதத்தில் திருப்பி தந்து விடுவதாக கூறி எதிரி என்னிடம் கடன் வாங்கினார். 1 மாதம் கூட வட்டி தொகையை செலுத்தவில்லை. எதிரி பணம் கொடுக்காததற்கு நான் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தேனா என்றால் எதிரியிடம் கடனை பெற நான் எந்த வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடன் வாங்கியபின்னர் காசோலை எத்தனையாது மாதத்தில் காசோலை கொடுத்தார் என்றால் 10 வது மாதத்தில்தான் எதிரி காசோலையை கொடுத்தார். நான் புகாரில் எதிரி கடன் பெற்று 1 வருடகாலமாக கடனை திருப்பி தராததபோதும் நான் பொறுமையாக இருந்தேன் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரிதான்.

5)எதிரிக்கு பணம் கொடுத்தபோது என் மகனிடமும், என் மனைவியிடமும் கேட்கவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் வழக்கு காசோலையை எதிரி கொடுத்தார் என்றால் 24.06.2024 ம் தேதி கொடுத்தார். மேற்படி தேதியை நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையை எதிரி எதற்காக என்னிடம் கொடுத்தார் என்றால் மேற்படி அசல் தொகையை திருப்பி செலுத்தும் விதமாக என்னிடம் கொடுத்தார். எங்கு வைத்து காசோலையை கொடுத்தார் என்றால் எதிரி என்னிடம் இலுப்பக்குடி பழனிசாமி ரோட்டில் வைத்துக்கொடுத்தார். நான் காசோலையை எப்போது கேட்டேன் என்றால் நான் காசோலை கேட்கவில்லை, எதிரியிடம்

அசலையும் வட்டியையும் கேட்டேன். அதற்கு எதிரி காசோலை தருவதாக கூறி காசோலை கொடுத்தார். நானும் எதிரியிடம் வட்டி கேட்கவில்லை. எதிரியும் வட்டி தரவில்லை. இந்த வழக்கு காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்றால் நான் தான் பூர்த்தி செய்தேன். எதிரி காசோலையில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்து சென்றார். காசோலையில் எதிரி கையொப்பம் செய்தே எடுத்து வந்தார். காசோலையில் உள்ள தேதியும் நான்தான் பூர்த்தி செய்தேன்.

6) காசோலையை எந்த தேதியில் பூர்த்தி செய்தேன் என்றால் 25.06.2024 ம் தேதி. வங்கியில் 26.06.2024 ல் வசூலுக்கு தாக்கல் செய்தேன். காசோலை எப்போது திருப்பப்பட்டது என்றால் தேதி எனக்கு தெரியவில்லை. எதிரியின் வங்கி காரைக்குடியில் உள்ள கார்பரேசன் வங்கி. நான் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி காரைக்குடி கிளையில் தாக்கல் செய்தேன். எதிரி ஆவின் நிறுவனத்தில் வேலை செய்தபோது மாதம் எவ்வளவு சம்பளம் என்றால் சுமார் 60 ஆயிரம் இருக்கும். எதிரி விவசாயம் உள்ளது, கார் வைத்துள்ளார், சொந்த வீடு உள்ளது என்றால் சரிதான். நான் எதிரியின் வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன்.

7) எதிரி கொடுத்த காசோலையை வங்கியில் செலுத்தியபோது வங்கி திருப்பிய ரிட்டன் மெமோவில் Bank is not in clearing mode. Hence clearing is not allowed என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியின் வங்கி கணக்கில் பணம் இருந்ததா இல்லை என்ற விபரம் எதுவும் ரிட்டன் மெமோவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லியுள்ளதுபோல் அக்டோபர் 2023 ம் ஆண்டு கடன் தொகை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கடன் கொடுத்தற்கான எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், என்னிடம் இல்லை என்றாலும் சரிதான். கடன் கொடுத்ததை நிரூபிப்பதற்கு என்னை தவிர வேறு சாட்சியோ, ஆதாரமோ இல்லை என்றால் சரிதான். எதிரிக்கு நான் உண்மையாகவே கடன் கொடுத்திருந்தால் ஏதாவது ஆவணம் எழுதி வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் 26 வருடம் இராணுவத்தில் பணபுரிந்து பின்னர் ஆவின் நிறுவனத்தில் வேலை செய்ததாலும், நல்ல

வெளிபழக்க வழக்கம் உள்ளவன் என்பதால் கடன் கொடுக்கும்போது பாதுகாப்பிற்காக எந்த ஆவணங்களை எழுதி வாங்கி கொள்ளவேண்டும் என்று தெரியும் என்றாலும் ஆனால் நான் எதிரிக்கு பணம் கொடுக்காத காரணத்தால்தான் ஆவணங்கள் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

8) எதிரிக்கு நல்ல வருமானமும், வசதியும் உள்ளது என்றாலும், என்னிடம் இருந்து கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாங்கள் தங்கள் மகனின் திருமணத்திற்காக எதிரியின் மனைவியின் பெயரில் உள்ள ஸ்கார்பிகோ காரை மகனின் திருமண பத்திரிக்கையை கொடுப்பதற்காகவும், வேறு வேலைகளை செய்தவற்காகவும், எதிரியிடம் கார் வீட்டில் சும்மாதானே இருக்கிறது என்றும் அதை திருமண வேலைக்கு வாடகைக்கு வேண்டும் என்று கூறி மாத வாடகை ரூ. 2 ஆயிரத்திற்கு திருமணம் முடிந்தவுடன் வாடகையை மொத்தமாக செலுத்திவிடுவதாக கூறிய 20 நாட்களுக்கு வாடகைக்கு எடுத்து சென்றேன் என்றாலும், அப்போது மேற்படி காரில் டேஸ்போர்டில் எதிரி காரின் பதிவுசான்று எதிரியின் ஆதார் அட்டை, எதிரியின் பார் கார்டு எதிரியின் மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பூர்த்தி செய்யாத கையொப்பம் செய்யாத வெற்றுக்காசோலையை அதனுடன் சேர்ந்து மேலும் ஒரு காசோலை வைத்திருந்தார் என்றாலும், மேற்படி ஆவணங்கள் காவல்துறையின் சோதனையின்போது கொடுப்பதற்காகவும் எதிரியின் அவசர தேவைக்காக பணம் செலுத்துவதற்காக காசோலையை வைத்திருந்தார் என்றும், அவற்றை எல்லாம் சேர்த்து காரை எடுத்துச்சென்றேன் என்றாலும், என் மகனின் திருமணம் முடிந்த பின்னர் காரை திருப்பி கொடுப்பதற்கு முன்பு எதிரி என்னிடம் இருந்து காரின் 20 நாட்களுக்குறிய வாடகையை கேட்டார் என்றாலும் நான் வாடகையை 10 ஆயிரம்மட்டும் கொடுத்துவிட்டு தற்போது என்னிடம் பணம் இல்லை என்றும் பின்னர் பாக்கி வாடகையை தருவதாக கூறினேன் என்றாலும், காரை எதிரியிடம் ஒப்படைத்துவிட்டு வாகனத்தில் உள்ளஆவணங்களை எதிரி கேட்டபோது காசோலையை தவிர மற்ற ஆவணங்களை

கொடுத்துவிட்டு மேற்படி காசோலைகளை வீட்டில் வைத்திருக்கிறேன் என்றும் பின்னர் தருவதாக கூறியதாகவும், அதன் பின்னர் எதிரி என்னிடம் மேற்படி பாக்கி வாடகையையும், காசோலைகளையும் கேட்டபோது பின்னர் தருவதாக கூறி காலம் கடத்தி வந்தேன் என்றாலும், அதனால் எனக்கும் எதிரிக்கும் மன வருத்தம் ஏற்பட்டு இருவரும் பேசிக்கொள்வது இல்லை என்றாலும், எதிரி என்னிடம் நல்ல பழக்க வழக்கம் இருந்தது என்றும், பாக்கி வாடகை தொகையையும், காசோலைகளையும் கேட்டு எதிரி என் மீது எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

9) எதிரிக்கும் எனக்கும் மனவருத்தம் ஏற்பட்டு பிரச்சனை இருந்ததால் நான் எதிரியின் வாகனத்தில் இருந்து எடுத்துவைத்திருந்த காசோலைகளை வைத்து நானாகவே பூர்த்தி செய்து எதிரியின் கையொப்பத்தையும் நானே காசோலையில் செய்து வழக்கு காசோலையை வங்கியில் செலுத்தி எதிரி மோசடி செய்தததாக பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் தொகை எதுவும் பெறவில்லை என்றாலும் வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றாலும், நான் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி எவ்வித குற்றமும் செய்யாதவர் என்றாலும் நிரபராதி என்றாலும், சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.30 18:24:57 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)